



திருச்சி தெற்கு மாவட்ட ”மாவட்ட பிரதிநிதிகள் சார்பாக கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மேலச்சிந்தாமணி சிதம்பரம் மஹால், பகுதியில் நடைபெற்றது. மாணவர்களிடையே வினாடி வினா போட்டிகள் தேதி சொல்லும் சேதி வரலாற்று குறிப்புகள் அடங்கிய நூல் வெளியீட்டு விழா ! மாநகர கழக செயலாளர், மு.மதிவாணன் வரவேற்புரையாற்றினார், மாணவர்களுக்கு பரிசு வழங்கி, ”தேதி சொல்லும் சேதி” வரலாற்று புத்தகத்தை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், பி.கே. சேகர் பாபு வெளியிட, திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெற்றுக்கொண்டார் .வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுகளை தலைமை நிலைய அலுவலக செயலாளர் துறைமுகம் காஜா வழங்கினார். நன்றியுரை : கேபிள் என்.மோகன் இந்நிகழ்வில் பகுதி கழகச் செயலாளர் மோகன், மாவட்ட பிரதிநிதிகள், ஜான் செல்லதுரை, கே.ஏ.ராஜேஷ், மூ.கா.முகேஷ்குமார், பா.விஜயபாலன், கே.என்.நலங்கிள்ளி, ஆர்.அருண்சன்னாசி, பி.மணிகண்டன், வி.கண்ணதாசன், பி.கோபிநாத் மற்றும் கழக நிர்வாகிகள் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர் .



நீலகிரி மாவட்டம், கூடலூர், பிதர்காடு பகுதியைச் சேர்ந்த செல்வன்.குணசேகரன் என்பவர் பொன்னானி ஆற்றில் மீன்பிடிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக ஆற்றில் மூழ்கி உயிரிழந்ததை தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் குணசேகரனின் குடும்பத்தினருக்கு 21.07.2024 அன்று ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 இலட்சத்திற்கான காசோலையினையும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் ரொக்கத்தினையும் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் , முன்னாள் அரசு கொறடா முபாரக் உட்பட பலர் உள்ளனர்.

### முதலமைச்சர் காணொலியில் திறந்து வைத்தார்!

# பாலன்நகர் மற்றும் கறம்பக்குடி பிலாவிடுதி திட்டப் பகுதிகளில் புதிய கட்டிடங்கள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

புதுக்கோட்டை,ஜூலை-24 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (22.07.2024) அன்று தலைமைச் செயலகத்தில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில், புதுக்கோட்டை மாவட்டம், பாலன்நகர் மற்றும் கறம்பக்குடி பிலாவிடுதி திட்டப் பகுதிகளில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து கறம்பக்குடி பிலாவிடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா தலைமையில் கலந்து கொண்டார்.

பின்னர் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களும் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் பொது மக்களுக்கு அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் அடுக்குமாடி குடியிருப்பு கள் கட்டி வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 541 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4184 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 382 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1459 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகம் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

அதன்படி, புதுக்கோட்டை மாவட்டம், பாலன்நகர் பகுதி 2 திட்டப் பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் ரூ.23.57 கோடி செலவில் 256 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் கறம்பக்குடி திட்டப் பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் ரூ.10.50 கோடி செலவில் 96 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக்குடியிருப்புகளில் ஒவ்வொரு குடியிருப்பும், வசிப்பறை, சமையலறை, படுக்கையறை, குளியலறை மற்றும் கழிப்பறை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும் குடியிருப்புகளுக்கு போதுமான காற்றோட்ட வசதி, தண்ணீர் வசதி, ஆழ்துளை கிணறுகள், கீழ்நிலை தண்ணீர் தொட்டிகள், மழைநீர் வடிகால், பேவர் பிளாக் நடைபாதை மற்றும் கழிவுநீர் தேக்குத்தொட்டிகள் ஆகிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இக்குடியிருப்புகளை பயன்படுத்தும் பொதுமக்கள், இதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்.சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், செயற்பொறியாளர் மு.ஜீவானந்தம், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, உதவிப் பொறியாளர் சு.பிரியங்கா, உதவி நிர்வாகப் பொறியாளர் சி.யோகேஸ்வரன், உதவிப் பொறியாளர் (பாலன் நகர்) பா.சக்திவேல், இளநிலைப் பொறியாளர் செ.அப்துல்காதர், வட்டாட்சியர்கள் பரணி, ஜபருல்லா, வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துராமன், அட்மா கமிட்டி தலைவர் வெ.முத்துகிருஷ்ணன், பிலாவிடுதி ஊராட்சிமன்றத் தலைவர் விஜயரவி பல்லவராயர், ஊராட்சிமன்ற துணைத் தலைவர் நித்யா சந்திரசேகர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# செஞ்சியில் சந்தனக் கூடு விழா: அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

செஞ்சி, ஜூலை 24 -

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி மந்தவெளியில் உள்ள ஹசரத் சையத் யூசுப் ஷா அவுலியா தர்காவில் சந்தனக்கூடு விழா விமர்சையாக நடைபெற்றது இதை முன்னிட்டு கடந்த 17ஆம் தேதிசெஞ்சி சந்தை தோப்பில் உள்ள ஹசரத் சையத் இஸ்மாயில் ஷா அவுலியா தர்காவிலும்,ஹசரத் சையத் யூசூப்ஷா அவுலியா தர்காவிலும்பிறைக் குடி ஏற்றப்பட்டது.

தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு 7மணி அளவில்மந்தவெளியில் உள்ள ஹசரத் சையத் யூசூப் ஷா அவுலியா தர்காவில் சந்தனகூடு விழாவை முன்னிட்டு சிறப்பு பாத்திஹா ஓதும்நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் கலந்து கொண்டு பாத்திஹா ஓதும் நிகழ்ச்சி யில் கலந்து கொண்டார்.

தொடர்ந்து நடைபெற்ற பொது விருந்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கும் நிக ழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி வட்ட ஜமாத் தலைவர் சையத் மஸ்ஜித் பாபு, செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் முன்னாள் நகர செயலாளர் காஜா நஜிர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து இரவு 10 மணிக்கு சந்தனக்கூடு உற்சவம் நடைபெற்றது.சந்தனக்கூடு ஊர்வலம்புறப்பட்டு செஞ்சி செட்டி பாளையம் சம்பாபூரில்அமைந்திருக்கும் ஹசரத் சையத் காஜா பதவல் லாஷா அவுலியாதர்காவை சென்றடைந்து சந்தனம் ஏற்றி பாத்திஹா ஓதியபிறகு அங்கிருந்து புறப்பட்டு வழிநெடுக்கிலும் முஸ்லிம் இளைஞர்கள் சங்கம் சார்பில் சிலம்பாட்டம் மற்றும் பல வீர விளையாட்டுடன் நேற்று காலை 6மணியளவில் செஞ்சி ஹஸ்ரத் சையத் யூசூப் ஷாஅவுலியா தர்காவை வந்தடைந்து சந்தனம் ஏற்றி பாத்திஹாஓதப்பட்டது.

நேற்று மாலை 6 மணிக்கு செஞ்சி கோட்டையில் இருக்கும் ஹசரத் சையத் தாதா பீர் அவுலியா தர்காவில் சந்தனம் ஏற்றியும்,செஞ்சிக்கோட்டை சக்கர குளம் வழியில் இருக்கும் ஹசரத் சையத்நிஜாமுதீன் அவுலியா தர்காவில் சந்தனம் ஏற்றியும் பாத்திஹாஓதப்படும்

சந்தனக்கூடு விழாவிற்கான ஏற்பாடுகளை ஹசரத் சையத் யூசூப்ஷா அவுலியா தர்கா கமிட்டி நிர்வாகி கள்கௌரவ தலைவர் ஜான் பாஷா, தலைவர் அசாதுல்லா, செயலாளர் சர்தார்,பொருளாளர் ஷமியுள்ளா, துணைத் தலைவர்கள் ஷாஜகான், முபாரக், துணைச் செயலாளர் ஹாஜி ஷரீப்,உள்ளிட்டோர் செய்து வருகின்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.07.2024) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில், புதுக்கோட்டை மாவட்டம், பாலன்நகர் மற்றும் கறம்பக்குடி பிலாவிடுதி பகுதிகளில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து கறம்பக்குடி பிலாவிடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் கலந்துகொண்டார். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### அமைச்சர் சு.முத்துசாமி - என்.நல்லசிவம் முன்னிலை! ஈரோடு மாவட்டம் - முன்னாள் எம்.பி.

# வி.பி.சண்முகசுந்தரம் நினைவேந்தல் - படத்திறப்பு நிகழ்ச்சி!

## திருவுருவப் படத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி திறந்து வைக்கிறார்!

ஈரோடு, ஜூலை 23-

ஈரோடு மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடி - முன்னாள் எம்.பி. கோபி வி.பி.சண்முகசுந்தரம் அவர்களின் நினைவேந்தல் - திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது என கோபி நகரக் கழகச் செயலாளர் என்.ஆர்.நாகராஜ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கோபி நகரக் கழக செயலாளர்,கோபி நகராட்சி தலைவர் என்.ஆர்.நாகராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஈரோடு வடக்கு மாவட்ட திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வி.பி.



சண்முகசுந்தரம் அவர்களின் மறைவையொட்டி, நினைவேந்தல் மற்றும் படத் திறப்பு விழா நிகழ்ச்சி, இன்று (24.07.2024 - புதன்கிழமை) காலை 9.30 மணியளவில், கோபி,கொளப்பலூர் முதன்மை சாலையில்( வேட்டைக்காரன் கோயில்) உள்ள, வாசு சென்னியப்பா மஹால் திருமண மண்டபத்தில், நடைபெற உள்ளது.

இந் நிகழ்ச்சியில், திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்கள், தலைமையேற்று வி.பி.எஸ் அவர்களின் படத்தை திறந்து வைக்கிறார்.

இந் நிகழ்ச்சியில், எனது (கோபி நகர தி.மு.க. செயலாளர், கோபி நகராட்சி தலைவர் என். ஆர்.நாகராஜ்) வரவேற்புரையில், தமிழ்நாடு அரசு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர், சு.முத்துசாமி, ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் என்.நல்லசிவம் ஆகியோர் முன்னிலை வகித்து உரையாற்றுகிறார்கள்.

ஆகவே. இந் நிகழ்ச்சியில், மாநில, மாவட்ட, நகர நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள் வாக்குச் சாவடி ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச் சாவடி நிலை முகவர்கள், கழக முன்னாள் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய், தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மோசடிகளின் மொத்த உருவமாகக் காணப்படும் ‘நீட்’ தேர்வைப் புறந்தள்ளுவோமென்ற

# தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் கோரிக்கைக்கு ஒன்றிய அரசு செவி மடுக்க வேண்டும்!

## “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூலை 24 -**

**மோசடிகளின் மொத்த உருவமாக காணப்படும் ‘நீட்’ தேர்வை புறம் தள்ளுவோம் என்கிற தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் கோரிக்கைக்கு எதிர்காலத்திலாவது ஒன்றிய அரசு செவி மடுக்க வேண்டும் என “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.**

அது வருமாறு:–

தொழில்நுட்ப படிப்புகளின் தரத்தை உயர்த்துவதும், அதில் சேர விரும்பும் மாணவர்களின் திறமைகளை எடைபோடும் வகையில் இருப்பதுதான் தேசிய அளவிலான பொது நுழைவுத்தேர்வுகளின் நோக்கமாகும். ஆனால் நீட் உள்ளிட்ட தேர்வுகள் அனைத்து விதமான மோசடிகளின் ஆணிவேராக உள்ளன. நடப்பாண்டுக்கான நீட் தேர்வு நாடு முழுவதும் 571 நகரங்களில் கடந்த மே 5ம் தேதி நடந்தது. இத்தேர்வை 23 லட்சத்து 33 ஆயிரத்து 297 பேர் எழுதினர்.

தேர்வெழுதியவர்களின் எண்ணிக்கையை கூட தேர்வு முகமையால் சரிவர தர முடியவில்லை. ஜூன் 4ம் தேதி தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நிலையில், மொத்தம் 13 லட்சத்து 16 ஆயிரத்து 268 பேர் தேர்ச்சி பெற்றனர். இந்த தேர்வில் இதுநாள் வரை இல்லாத அளவுக்கு 67 பேர் முழு மதிப்பெண்கள் பெற்றிருந்தனர். மேலும் நேரக்குறைபாடு சிக்கல்கள் காரணமாக 1563 பேருக்கு கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டன. வினாத்தாள் விற்பனை, ஆள் மாறாட்டம் என பல்வேறு முறைகேடுகள் இம்முறை நீட் தேர்வில் நடந்தேறின.

இதையடுத்து உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் குவிந்தன. தேசிய அளவிலான ஒரு நுழைவுத்தேர்வில் இத்தனை முறைகேடுகளா என மாணவர் சமுதாயமே கொந்தளித்தது. கோர்ட் தீர்ப்பின் அடிப்படையில் கருணை மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு, மீண்டும் மறுத்தேர்வு ஜூன் 23ம் தேதி நடத்தப்பட்டது. நீட் தகுதி தேர்வை ரத்து செய்துவிட்டு, மறுத்தேர்வு நடத்திட வேண்டும் என பல்வேறு கோரிக்கைகள் எழுந்த நிலையில், உச்சநீதிமன்றம் அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டது.

அதேசமயம் நீட் தேர்வில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் மையங்கள் வாரியாக தேர்வு முடிவுகளை வெளியிட கோர்ட் உத்தரவிட்டது. இதிலும் பல பூதங்கள் வெளிவர தொடங்கியுள்ளன. குஜராத் மாநிலம் ராஜ்கோட், ராஜஸ்தான் மாநிலம் சிகார் ஆகிய தேர்வு மையங்களில் தேர்வு எழுதியோர் அதிகபட்ச தேர்ச்சி பெற்றது தெரிய வந்துள்ளது. ராஜ்கோட் மையத்தில் தேர்வு எழுதிய மாணவர்களில் 70 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



தினகரன்

தொடரும் நீட் அநீதி

குஜராத்தில் மட்டுமே 700 மதிப்பெண்களுக்கு மேல் 122 மாணவர்கள் பெற்றுள்ளனர். ராஜஸ்தானில் 700 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 482 ஆக உள்ளது. இதில் சிகார் பகுதியைச் சேர்ந்த 149 மாணவர்கள், நாட்டிலேயே அதிகபட்ச தேர்ச்சியை பெற்றுள்ளனர். மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களிலும் நல்ல தேர்ச்சியை மாணவர்கள் பெற்றிருப்பது, பா.ஜ. ஆளும் மாநிலங்களில் மருத்துவர்களை அதிகரிக்க திட்டமிட்டி ருப்பதாகவே தெரிகிறது.

நீட் முறைகேடுகள் அதிகம் நடந்த குஜராத், ராஜஸ்தான், உ.பி. மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் தேர்ச்சி விகிதமும் அதிகரித்திருப்பது பல்வேறு வினாக்களை எழுப்புகிறது. நீட் தேர்வுகளில் இவ்வாறு முறைகேடுகள் அதிகரித்தால், எதிர்காலங்களில் ஒருவர் பிளஸ்2 வரை பெயரளவுக்கு படித்துவிட்டு, நீட் தேர்வில் மட்டும் சாதித்து விட்டால், மருத்துவ கனவை நனவாக்கி கொள்ள முடியும். நல்ல மருத்துவராக ஒருவர் உயர்வதற்கும், நீட் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதற்கும் தொடர்புள்ளதா என்றால், நிச்சயமாக இல்லை.

பிளஸ்2 வரை ஒருவர் முதல் மதிப்பெண் பெற்றுவிட்டு, நீட் தேர்வு என்னும் தடை தாண்டும் ஓட்டத்தில் பின்தங்கும்போது, அவரது மருத்துவ கனவு பொசுங்கி விடுகிறது. மோசடிகளின் மொத்த உருவமாக காணப்படும் நீட் தேர்வை புறம் தள்ளுவோம் என்கிற தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் கோரிக்கையை எதிர்காலத்திலாவது ஒன்றிய அரசு செவிமடுக்க வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 1980 ஆம் ஆண்டு ஜூலை 20 ம் தேதி தி.மு.க. இளைஞரணி தொடங்கப்பட்ட நாள் மற்றும் கலைஞர் நூற்றாண்டு விழாவை ஒட்டி நாமக்கல் மேற்கு மாவட்டம் முழுவதும் நடைபெற்ற தி.மு.க. கொடியேற்று விழாவில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்ட குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில் கழக இருவண்ணக் கொடிகளை ஏற்றி வைத்தார். இந்நிகழ்வில் நகர செயலாளர் தா.கார்த்திகேயன், நகரமன்றத் தலைவர் நளினி சுரேஷ்பாபு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன், ஒன்றிய செயலாளர்கள் ஜி.தங்கவேல், கு.பழனிவேல், பேரூர் செயலாளர் திருமலை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.